# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 18 | 01-06-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 103





# கொக்காவில் பகுதியில் கோரவிபத்து

# இருவர் பலி; இருவர் காயம்

## ஒருவரின் நிலை கவலைக்கிடம்

(அலுவலக செய்தியாளர்)

**கொக்காவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் வாகனச்சாரதி உட்பட இருவர் பலியாகினர். மேலும் இருவர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. வவுனியாவிலிருந்து யாழ். நோக்கி ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கைஎஸ் வாகனமொன்று மண் ஏற்றிச் சென்ற உயர் பாரவூர்தி (டிப்பர்) யுடன் விபத்துக்குள்ளாகியது.**

இவ்விபத்தில் கைஎஸ் வாகனத்தில் பயணம் செய்த யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரான சிற்றம்பலம் பத்மநாதன் (வயது 68) என்பவர் அந்த இடத்திலேயே பலியானார். இவர் மருதவோடை ஓமந்தையில் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கைஎஸ் வாகனச் சாரதியான நந்தசேன என்பவர் படுகாயமுற்ற நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

இவரது சடலம் வவுனியா மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)



விபத்தில் பலத்த சேதமடைந்த கைஎஸ் வாகனத்தைப் படங்களில் காணலாம்.

## இரு சடலங்கள் கரையொதுங்கின

(யாழ்ப்பாணம்)

யாழ்- மண்டைதீவு கடற்கரையோரத்தில் உருக்குலைந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அடையாளம் காணமுடியாதவளவு உருக்குலைந்துள்ள இவ்விரு சடலங்களும் ஊர்காவற்றுறை பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## டோக்கியோ மாநாடு குறித்து அரசு குழப்பமான நிலையில் உள்ளதாம்!

### பி.பி.ஸி.கூறுகின்றது

டோக்கியோ மாநாடு குறித்து சிறிலங்கா அரசாங்கம் தர்மசங்கடமான நிலையிலுள்ளதாக பி.பி.ஸி.யின் கொழும்பு முகவர் கூறியுள்ளார்.

டோக்கியோ மாநாட்டிற்கு தனியாகச் செல்வதா இல்லையா என்ற குழப்பத்தில் அரசு உள்ளது என்றும் பி.பி.ஸி.யின் கொழும்பு முகவர் கூறியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் கலந்துகொள்ளாவிட்டாலும் டோக்கியோ மாநாடு அர்த்தமுள்ளதாக இருக்குமென சிறிலங்காவின் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஜப்பானிய அரசிடம் கூறியுள்ளார்.

## புலிகளால் கைது செய்யப்பட்டிருந்த இரு சிறிலங்காப் பொலிசாரும் விடுதலை

மூதூர் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்ட இரண்டு சிறிலங்கா பொலிசாரும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கட்டைபறிச்சான் பாலத்திற்கு அருகில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் மூதூர் பகுதி உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இரு பொலிசாரிடமும் பொலிஸ் அதிகாரிகள் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இவர்கள் சென்றதை அடுத்து இவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர்.

## வவுனியா குடியிருப்புக் குளத்தில் அழுகிய நிலையில் ஆணின்சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா குடியிருப்புக் குளத்தில் இருந்து அழுகிய நிலையில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு கல்யாண மண்டபத்தில் உள்ள இராணுவ முகாமுக்கு முன்னால் இருக்கின்ற இக்குளத்தில் இருந்து நேற்று மாலை 4.00 மணிக்கு இச்சடலம் மீட்கப்பட்டது.

சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க இச்சடலம் அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளது. இச்சடலத்திற்குரியவர் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இச்சடலத்தில் நீளக் காற்சட்டையும் ரி.சேட்டும் காணப்படுகின்றது. குளத்தில் சடலம் மிதப்பதை கண்ட மக்கள் இது தொடர்பாக சம்பந்தப்

(10ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சிக் கிழக்குக்கடலில்

## மூன்று சிறில. கடற்படைமாலுமிகளை இரு தினங்களாகக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் வடமராட்சிக்கடற்பிரதேசத்தில் சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்த மாலுமிகள் மூன்று பேர் நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் காணாமல் போயுள்ளனர்.

இயந்திரத்துப்பாக்கி பொருத்தப்பட்ட படகொன்றில் பருத்தித்துறையிலிருந்து மணற்காடு நோக்கிச் சென்ற சமயம் இவர்கள் காணாமல் போயுள்ளதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போயுள்ள மாலுமிகளைத் தேடும் நடவடிக்கைகளில் கடற்படையினர், விமானப்படையினர் உதவியோடு ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து இராணுவப்

(10ஆம் பக்கம் பார்க்க)

### நீர்வேலியில் தோட்டக்கிணற்றிலிருந்து

## வர்த்தகர் ஒருவரின் சடலமும் மோட்டார் சைக்கிளும் மீட்பு

(வடமராட்சி)

வலிகாமம் கிழக்கு நீர்வேலிப்பகுதியில் விவசாயக் கிணறு ஒன்றில் இருந்து நபர் ஒருவரது சடலமும் மொட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவபாதம் (வயது-50) என இனங்காணப்பட்டுள்ளது.

நீர்வேலிப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான இவர் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் பின்னர் இவர் வீடுதிரும்ப

(10ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் சோதனைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமராட்சிப் பிரதேச அலுவலகத்தில் நேற்று முன்தினம் கண்காணிப்புக்குழு பிரதிநிதி மேற்கொண்ட சோதனை குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிசக்தி வாய்ந்த தொடர்பு சாதனங்கள் அலுவலகத்தினுள் இருப்பதாகக் கூறி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி ஒருவரால் இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டாலும் இந்த நடவடிக்கைக்காக விடுலைப்புலிகளின் அனுமதியின்றி பொலிஸ் மற்றும் இராணுவம் வரவழைக்கப்பட்டமை மற்றும் அலு

(10ஆம் பக்கம் பார்க்க)

### வவு.நகரசபை வாசலில்

## பொங்குதமிழ் நினைவுத்தூபி முடிவடையும் நிலையில்!

(வவுனியா)

வவுனியா நகரசபை வாசலில் அமைக்கப்பட்டு வரும் பொங்குதமிழ் நினைவுத்தூபி அமைக்கும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது.

வவுனியாவில் பேரெழுச்சியுடன் நடாத்தப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வின் நினைவாக இந்த நினைவுத்தூபி அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான அடிக்கல்லினை அமைச்சர் பி.சந்திரசேகரன் நாட்டியி

(10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் கடிதம் குறித்து சிறிலங்காப் பிரதமர் ஆலோசனை

### மாற்றுத்திட்டம் முன்வைக்கப்படலாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அனுப்பி வைத்த கடிதம் குறித்து சிறிலங்காப் பிரதமர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை குறித்த சிறிலங்கா அரசாங்கத்தின் ஆலோசனையினை தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் இரவு இந்த ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான மாற்றுத்திட்டம் ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் முன்வைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**அறிவுடைமை கல்வி நிலையம், கிளிநொச்சி**

2004, 2005 க்கான PHYSICS - செந்தில்குமரன் B.Sc. CHEMISTRY - சரவணபவான் B. Sc. 02.06.2003 திங்கள் பி.ப 4.00 க்கு ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்களுக்கு: நிர்வாகி. (3296)

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)


# வவுனியாவில் மகாபொல புலமைப்பரிசில் வழங்கல்

(வவுனியா செய்தியாளர்)

மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியாவில் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு வவுனியா அரச அதிபர் க. கணேஷ் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் அகமட்ஹூன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கினர். வவுனியாவில் நேற்று 52 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டன. இதேவேளை இலங்கை முழுவதும் 8200 பேருக்கு நேற்று புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. (10,28)

# கரைச்சி பாடசாலைகளுக்கிடையேயான பெருவிளையாட்டுப் போட்டிகள்

கரைச்சிக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. இதில் உருத்திரபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் அரையிறுதிப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது. இத்துடன் பெண்களுக்கான கரப்பந்து, வலைப்பந்து போட்டிகள் கனகபுரம் ம.வியிலும், ஆண்களுக்கான கரப்பந்து கிளி. பாரதி வித்தியாலயத்திலும் நேற்று ஆரம்பமாகி இன்று இறுதிப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, இருபாலாருக்குமான கபடி கிளி. மத்திய கல்லூரியிலும் எல்லே, கிரிக்கெட், செஸ் போட்டிகள் கிளி. இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. இப் போட்டிகள் வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.



கிளிநொச்சி ம.வி.இந்துக்கல்லூரி அணிகளின் அரையிறுதி ஆட்டத்தின்போது.

# பாதாளக் குழுவினரைப் பிடிக்க விசேட பொலிஸ் அணி

மிக மோசமான கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் பாதாள உலகக்குழுக்களையும் நபர்களையும் கைது செய்யும் பொருட்டு விசேட பொலிஸ் அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

விசேட குற்றத்தடுப்பு பிரிவு என்ற பெயரில் இயங்கவுள்ள இந்தப் பொலிஸ் அணியில் விசேட பொலிஸ் பிரிவின் அதிகாரிகளும் இடம்பெறவுள்ளனர்.

இந்த விசேட பொலிஸ் அணியின் நடவடிக்கைகள் பொலிஸ்மா அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

# மண்சரிவுகளால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளை இனங்காண நடவடிக்கை

(கொழும்பு)

மண்சரிவுகளால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளை இனங்கண்டு அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இந்த முயற்சிகளில் எட்டு நிபுணர்குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் அமைச்சும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையமும் கூட்டாக இந்த ஆய்வு வேலைகளை ஆரம்பித்துள்ளன.

அண்மையில் ஏற்பட்டவெள்ளப் பெருக்கு, மண்சரிவுகளினால் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து உத்தியோக பூர்வ மதிப்பீட்டை மேற்கொள்ள மொறட்டுவ பல்கலைக் கழகம் முன்வந்துள்ளது.

பூர்வாங்க வேலைகள் நேற்று இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்பட்டன.

## நிர்வாகசபை தெரிவுக்கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நிர்வாக சபைத்தெரிவுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் ஒன்று கூடுமாறு முல்லை. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியச் செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (26)

# வவுனியா கல்வியியற் கல்லூரி பட்மின்ரனில் சம்பியன்

(வவுனியா செய்தியாளர்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையிலான பட்மின்ரன் போட்டியில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி சம்பியனாகி உள்ளது.

றுகுணு தேசியகல்வியியற்கல்லூரியில் நடைபெற்ற பட்மின்ரன் போட்டியில் 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் பங்கு பற்றின. இவற்றில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் ஊவா தேசிய கல்வியியற் கல்லூரியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

இவ் இறுதிப்போட்டியில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது. இதேவேளை கிரிக்கெட், உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஏற்கனவே சம்பியனாகி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# தேங்காய், நெய் பாவனைக்கும் இருதய நோய்க்கும் தொடர்பில்லை

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

மனிதர்களுக்கு ஏற்படும் இருதய நோய்களுக்கும் தேங்காய்ப்பால் எண்ணெய் என்பவற்றின் பாவனைக்கும் எதுவித தொடர்புமில்லை என விஞ்ஞானிகள் ஆய்வுகளின் மூலம் தெரிவித்துள்ளனர். கொழும்பில் நடைபெற்ற "உணவு தயாரித்தலில் தேங்காய் நெய் பாவித்தல்" எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட இதயநோய் நிபுணரான வைத்தியர் அத்துக்கோரளை இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகமாவதற்கு தேங்காநெய் காரணமாவதற்கான சான்றுகள் எதுவுமில்லை என்று கூறியுள்ளார்.

## கண்டெடுப்பு

க.பாலேந்திரன் என்பவருக்குச் சொந்தமான முக்கிய ஆவணங்கள் சில கிளிநொச்சி கிருஸ்ணர் கோவில் வளாகத்தில் ஆலய தொண்டர் ஒருவரால் நேற்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ் ஆவணங்களை தவறவிட்டவர் கிளிநொச்சி பிரதான சாலையிலுள்ள ஈழநாதம் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.


## முல்லைத்தீவு நகரத்தில் நிழற்படப்பிரதி சேவை

முல்லைத்தீவு நகரில் கரைநுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தினால் 02.06.2003 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தரமான நிழற்படப்பிரதி செய்து கொடுக்கப்படும் என்பதனை சகல பாவனையாளர்கட்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**பொதுமுகாமையாளர்,**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,**
**முல்லைத்தீவு.**

(சி-7887)


# வெள்ள இழப்புக் குறித்து ஆராய ஐ.நா.குழு வருகை

(கொழும்பு)

தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு இழப்புக்கள் குறித்து கணக்கிட ஐக்கிய நாடுகள் அபிவிருத்திட்டத்தைச் சேர்ந்த ஆறு பேர் சிறிலங்கா வந்துள்ளனர்.

இவர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து வெள்ளம் மற்றும் மண்சரிவினால் ஏற்பட்ட சேத விபரம் குறித்து கணக்கிடவுள்ளனர்.

அத்துடன் வெள்ளப்பாதிப்பு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு இவர்கள் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்க உள்ளனர்.


## தமிழீழ சட்டக்கல்லூரி - நீதி நிர்வாகத்துறை

## உள்வாரி சட்டக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல் – 2003

தமிழீழ சட்டக்கல்லூரியில் உள்வாரியாக கல்வி பயிலுவதற்கான ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் சட்டக்கற்கை நெறிக்கு தகுதியும் ஆர்வமும் உடையவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்.**

01. குறைந்தது க.பொ.த.(உ/த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். என்பதுடன் க.பொ.த (சா/த) தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் வேண்டும்.

02. விண்ணப்ப முடிவுத்திகதி : 2003-07-01
விண்ணப்பங்களை தமிழீழ மாவட்ட நிதிமன்றம் (முல்லைத்தீவு, மல்லாவி, கிளிநொச்சி, ஜெயபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை) ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை அதிபர், தமிழீழ சட்டக்கல்லூரி கிளிநொச்சி எனும் முகவரிக்கு 2003-07-01 ஆம் நாளுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும். தபால் உறையின் இடதுபுற மேல் மூலையில் "உள்வாரி சட்டக்கற்கை நெறி விண்ணப்பம்" எனவும் தவறாது குறிப்பிடவும்.

03. மேற்குறிப்பிட்ட தகுதியுடையவர்களுக்கு 2003-08-10 ஆம் நாள் உள்வாங்குவதற்கான போட்டிப்பரீட்சை தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சியில் நடைபெறும்.

குறிப்பு:- இப்போட்டி பரீட்சைக்கான மேலதிக விபரங்களை தமிழீழ சட்டக்கல்லூரி கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

**அதிபர்,**
**தமிழீழ சட்டக்கல்லூரி,**
**நீதி நிர்வாகத்துறை,**
**தமிழீழம்.**

(சி-7886)


# கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கொழும்பில் பட்டமளிப்பு விழா

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா திட்டமிட்டபடி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 09ஆம் திகதி 95/97 கல்வியாண்டில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கும் 10ஆம் திகதி 96/98 கல்வியாண்டில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கும், 11ஆம் திகதி 97/99 கல்வியாண்டில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கும் 12ஆம் திகதி 98/2003 கல்வியாண்டிலில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கும் பட்டமளிப்பு விழா நடைபெற உள்ளது.

மேலும் 94/96 கல்வியாண்டில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன ஆயினும் இதுவரை அதற்கான முடிவுகளை கல்வி அமைச்சு அறிவிக்கவில்லை என வவுனியா தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி திரு.க.பேர்ணாட் அவர்கள் தெரிவித்துள்ளார். (10)

## கம்பகா ரயர் தொழிற்சாலையில்

# நச்சு இரசாயனப் பொருட்களால் 55 ஊழியர்களுக்கு சுகயீனம்

கம்பகா-உக்கல்கொட ரயர் உற்பத்தித் தொழிற்சாலையில் பணியாற்றும் 55 ஊழியர்கள் நச்சு இரசாயனப் பொருள் ஒன்றினால் சுகயீனமடைந்துள்ளனர்.

இதனையடுத்து இவ் ஊழியர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இவர்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இவர்களில் 11 பேர் குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளனர். இச்சம்பவம் குறித்து கம்பகா குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர்.

# சனாதிபதி புஷ்சின் ஒரு வார பயணம் ஆரம்பம்;

# சர்வதேச உறவை மேம்படுத்தும் நடவடிக்கை!

## - சமாதானத் திட்டத்திலும் முக்கிய பங்கேற்பு

(வாஷிங்டன்)

**அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வெளிநாடுகளுக்கான ஒருவார கால பயணத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளார். ஈராக் யுத்தத்தின் விளைவாக சர்வதேச உறவில் ஏற்பட்ட பாதிப்புக்களை சரிசெய்யும் வகையிலேயே இப்பயணம் அமைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அத்துடன் இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான நடவடிக்கையொன்றிற்கான முன்னேற்றத்திற்கும் இவரது பயணம் வழிசமைக்கிறது.**

முன்னதாக போலந்துக்கு சென்றுள்ள அவர் அங்கு பல்வேறுபட்ட விடயங்கள் குறித்து முக்கிய தலைவர்களுடன் கலந்தாலோசனை நடத்தி வருகிறார்.

சதாம் ஹுசைனை பதவியில் இருந்து கவிழ்ப்பதற்கு மேற்கொண்ட யுத்தத்தில் ஆதரவை தெரிவித்த போலந்துக்கு நன்றி கூறுவதற்காக சனாதிபதி புஷ் இப்போது இரண்டாவது தடவையாக அங்கு சென்றுள்ளார்.

ஈராக்கின் கால்வாசிப்பகுதியில் அமைதியை பேணுவதற்கு தலைமை தாங்குவதாக போலந்து உறுதியளித்துள்ளது.

யுத்த எதிர்ப்பு அணியைச் சேர்ந்த பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும், சனாதிபதி புஷ் விஜயம் செய்கிறார்.

இதனை அடுத்து எகிப்துக்கு செல்ல இருக்கும் சனாதிபதி புஷ் அங்கிருந்து ஜோர்தான் செல்வார்.

ஜோர்தானில் வரும் நான்காம் திகதி இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனுடனும், பலஸ்தீன பிரதம மந்திரியுடனும் உச்சி மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சுடன் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னதாக இஸ்ரேலிய பலஸ்தீன பிரதம மந்திரிகள் நேற்று முன்தினம் சந்தித்து உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தி உள்ளார்கள்.

சில பலஸ்தீனக் கைதிகளை விடுவிப்பது உட்பட பலஸ்தீனர்களுக்கு பல்வேறு அனுகூலங்களை வழங்குவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்க ஆதரவான சமாதானத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு அமைய மேற்குக் கரை மற்றும் காசா பகுதி ஆகியவற்றில் இருந்து துருப்புக்களை திருப்பி அழைக்க இஸ்ரேல் மறுப்பு தெரிவித்துள்ளது.



## இரு அமெரிக்க வீரர்கள் பலி!

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க இராணுவ வாகனம் ஒன்று வீதி விபத்தில் சிக்கியதில் அமெரிக்கப் படையினர் இருவர் பலியாகி உள்ளனர். மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் யுத்தத்திலும் வாகன விபத்துக்களிலும் உயிரிழக்கும் அமெரிக்க வீரர்களின் தொகை அதிகரித்து வருகின்றது.

இந்த வாரம் மாத்திரம் பதுங்கி இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களிலும் விபத்துக்களிலுமாக 10 அமெரிக்கப் படையினர் பலியாகி உள்ளனர்.

## கணிசமான கட்டுப்பாடுகளை நீக்க ஜப்பான் நடவடிக்கை!

(டோக்கியோ)

ஈராக் மீதான அநேகமான கட்டுப்பாடுகளை நீக்குவதாக ஜப்பான் தீர்மானித்துள்ளது.

ஐ.நா.சபை சர்வதேச ரீதியாக விதித்திருந்த தடைகளை நீக்கிய பின்னர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜப்பான் கூறியுள்ளது.

முதல் கட்டமாக பணப்பரிமாற்றம், முதலீடுகள், ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முதல் இரு நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வர்த்தகத் தடைகள் அடுத்த மாத முற்பகுதியில் நீக்கப்படும். ஐ.நா.சபை கடந்த வியாழக்கிழமை ஈராக் மீதான 13 வருட கால பொருளாதாரத் தடையை நீக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.



பாக்தாத் நகரில் போக்குவரத்து பொலிசாரின் தலைமையகத்தில் வாடகைக்கு குடியிருக்கும் ஒரு தாய் தமது பிள்ளைகளை பராமரிக்கின்றாள். (இக்கட்டடம் சென்றமாத முற்பகுதியில் தீயினால் சேதமடைந்தது)

## ஹொங்கோவில் மோதலைத் தவிர்க்க

## பல்தேசிய அமைதிப்படையை அனுப்ப முடிவு

ஹொங்கோ சனநாயகக் குடியரசில் பூர்வீக குடியினருக்கு இடையில் ஏற்படும் மோதல்களால் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பிரெஞ் தலைமையிலான பல்தேசிய அமைதிப்படை ஒன்றை ஹொங்கோவுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

கடந்த சில வருடங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த மோதல்களில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த மூன்று வாரங்களில் மாத்திரம் நானூறு பேர் பலியாகி உள்ளனர்.

1994ஆம் ஆண்டில் எட்டு லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்ட நாடான ருவாண்டாவின் இடத்திற்கு ஹொங்கோவும் வந்துவிடும் என்று மனித உரிமை அமைப்புக்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

## ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை கண்டறிய அமெரிக்கா மீண்டும் முயற்சி!

(வாஷிங்டன்)

ஈராக்கின் இரசாயன உயிரியல் ஆயுதங்களைக் கண்டுபிடிக்க இதுவரை தோல்வியடைந்த முயற்சிகளைப் பாரிய அளவில் விஸ்தரித்து மீண்டும் மேற்கொள்ளப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் படி 1440 அமெரிக்க, பிரிட்டிஷ், அவுஸ்திரேலிய நிபுணர்கள் ஈடுபடவுள்ளனர்.

புதிய ஈராக் மதிப்பீட்டுக் குழுவுக்கு இராணுவ மேஜர் ஜெனரல் ஜிக்டேச்சன் தலைமை தாங்க உள்ளார் என்று பென்டகன் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்கா தெரிவித்த ஆயுதக் களைவு நடவடிக்கையை இந்தக் குழு மீண்டும் அமுல் செய்ய இருக்கின்றது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பினால் சனாதிபதி சதாம் ஹுசைன் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்டார். ஆனால், பேரழிவு ஆயுதங்கள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



கலிபோர்னியாவில் தபால் அலுவலகத்துள் புகுந்து தபால் அதிபரையும் ஊழியர் இருவரையும் பணயக் கைதிகளாகப் பிடித்த துப்பாக்கிதாரி அமைதியாக சரணடைகிறார்.

எதியோப்பியாவில் எய்ட்ஸ் நோய்க்குள்ளான 2 வயதுச் சிறுவனை தூக்கி வைத்திருப்பதை அவதானிக்கும் ஆடல் அழகி பொப்கெல்டொப்.



## - பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் -

## இந்திய துணைப் பிரதமர் உட்பட எண்மர் மீது மேலதிக குற்றப் பத்திரிகை சி.பி.ஐ தாக்கல்!

பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி, மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோசி உள்ளிட்ட எட்டுப் பேர் மீது சி.பி.ஐ நேற்று கூடுதல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

இதனை ஏற்றுக் கொண்ட சிறப்பு நீதிமன்றம் இந்த வழக்கு விசாரணையை வரும் பதின்மூன்றாம் திகதிக்குத் தள்ளி வைத்தது.

கடந்த 1992 ம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோசி, முன்னாள் மத்திய அமைச்சர் செல்வி உமா பாரதி உள்ளிட்ட எட்டுப் பேர் மீது சி.பி.ஐ உத்தரப் பிரதேச மாநிலம் பேரவளியிலுள்ள தனி நீதிமன்றத்தில் ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

இந்நிலையில் கூடுதல் தகவல்கள் அடங்கிய துணைக் குற்றப்பத்திரிகையொன்றை தாக்கல் செய்ய அனுமதி கோரிய வேளை அதற்கான அனுமதியை சி.பி.ஐக்கு நீதிமன்றம் வழங்கியது.

இந்த வழக்கில் ஏற்கனவே விசாரணை நடத்திய சி.பி.ஐ.டி பொலிசார் தயாரித்துள்ள விசாரணை அறிக்கை மற்றும் பத்திரிகைச் செய்திகள் விடியோப் படங்கள் புகைப்படங்கள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை ஜுன் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நாளொன்றுக்கு 750 பேர் புகைத்தலால் மரணம்!

உலகில் ஒரு நாளைக்கு 750 பேர் புகைத்தல் காரணமாக மரணமடைகின்றனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

புகைத்தல் பழக்கம் உள்ள நபர் ஒருவர் வருடம் ஒன்றுக்கு 1900 சிகரட்டுக்களைப் புகைக்கின்றார். உலகில் ஐந்து இலட்சம் பெண்கள் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர் என்வும் அந்த ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி






ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியில் பல விளையாட்டுக்கள் இலங்கையில் இந்த நூற்றாண்டு ஆரம்பிக்கும் போதே இடம்பெற்றிருந்தாலும்,1937 ஆம் ஆண்டில்தான் சர்வதேச விளையாட்டு அரங்கில் இலங்கை நுழைவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவுஸ்திரேலிய சிட்னி நகரில் இடம்பெறவிருந்த 3ஆவது சாம்ராஜ்ய விளையாட்டு விழாவில் **(3rd EMPIREGAMES)** கலந்து கொள்ள வருமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கான செலவுகளைப் பொறுப்பேற்க நிதியமொன்று வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டது. ஆயினும் இந்தச் சாம்ராஜ்ய விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் அணி அந்த நாட்டின் சாம்ராஜ்ய விளையாட்டுச் சங்கத்தினூடாகவே கலந்து கொள்ள முடியும் என்ற கட்டுப்பாடு இருந்தது. எனவே 1937 ம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி இத்தகைய சங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக விசேட கூட்டமொன்று கூட்டப்பட்டது. இக் கூட்டத்தின் போது 1940 ஆம் ஆண்டு டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருப்பது சுட்டிக்காட்டப்பட்டதுடன், அமைக்கப்படும் சங்கம் ஒலிம்பிக் போட்டிகளுக்குப் போட்டியாளர்களை அனுப்பக்கூடிய வகையில் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியமும் கருத்திற் கொள்ளப்பட்டது. இதனை அடுத்து "இலங்கை ஒலிம்பிக் மற்றும் சாம்ராஜ்ய விளையாட்டு சபை" என அச்சபைக்குப் பெயரிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இலங்கை ஒலிம்பிக் மற்றும் சாம்ராஜ்ய விளையாட்டுச் சபையின் ஆரம்பக் கூட்டம் 1937-ஏப்ரல் 30 ஆம் திகதி இடம்பெற்ற போது ஒலிம்பிக்கிலுள்ள 3 விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவை மெய்வல்லுநர், குத்துச்சண்டை, நீச்சல் ஆகிய விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளே இவ்வாறு கலந்து கொண்டவர்களாவர். இந்தக்கூட்டத்தின் போது அமைச்சூர் மெய்வல்லுநர் சபைத் தலைவராக விளங்கிய டாக்டர் வீ.ஆர்.ஷோகமன் தலைவராகவும் இந்தச் சங்கத்தின் செயலாளரான திரு **W.H.D** பெரேரா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரித்தானியச் சாம்ராஜ்யம் கலைக்கப்பட்டு பொதுநலவாய நாடுகள் ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டதுடன் சாம்ராஜ்ய விளையாட்டு விழா என்ற பெயரும் பொது நலவாய விளையாட்டு விழா என அழைக்கப்படலாயிற்று. இதற்கு ஏற்ப இலங்கை ஒலிம்பிக் மற்றும் சாம்ராஜ்ய விளையாட்டுச் சபை என்ற பெயர் "இலங்கை மற்றும் பொதுநலவாய விளையாட்டுச் சபை" என மாற்றப்பட்டது. இப் பெயர் சில காலத்தின் பின் "இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி" என மாற்றப்பட்டது.

இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கான பிரதான குறிக்கோள், சர்வதேச விளையாட்டு விழாக்களில் இலங்கையும் பங்குபற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக இருந்தது. இருப்பினும் ஒலிம்பிக் அமைப்பு ஒரு உலகளாவிய அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டதனால், தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் நோக்கங்களிலும், கடமைகளிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. சிறந்த வீரர்களைச் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளச் செய்வதே இதன் பிரதான பணியாகவும் நோக்கமாகவும் இருந்த போதிலும் தேசிய மட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் ஒலிம்பிக்கின் அடிப்படைக் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதும் இதன் கடமையானது.

இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி ஆரம்பத்திலிருந்தே இலங்கை விளையாட்டு வீரர்கள் அணி ஒலிம்பிக் போட்டிகள், பொது நலவாய நாடுகள் விளையாட்டு விழா, ஆசிய விளையாட்டு விழா, தெற்காசிய விளையாட்டுவிழா என்பனவற்றில் கலந்துகொள்ளவதற்குத் தேவையான அனுசரணைகளை வழங்கி வந்துள்ளது. அத்தகைய அணிகளில் முதலாவது அணி 1937ஆம் ஆண்டு சிட்னியில் இடம்பெற்ற சாம்ராஜ்ய விளையாட்டு விழாவில் கலந்துகொண்டதுடன் பலனையும் பெற்றது.குத்துச் சண்டைப்போட்டியில் கலந்துகொண்ட **A.W** பேர்ணி ஹென்றிகஸ் தங்கப்பதக்கத்தை இவ்விளையாட்டுவிழாவில் பெற்றார், சர்வதேச விளையாட்டு விழாவில் இலங்கையரால் பெறப்பட்ட முதலாவது தங்கப்பதக்கம் இதுவேயாகும். அடுத்து இரு சாம்ராஜ்ய (பொதுநலவாய நாடுகள்) விளையாட்டுவிழாவில் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்கள். 1950ஆம் ஆண்டு நியூசிலாந்து ஒக்லாந்தில் இடம்பெற்ற சாம்ராஜ்ய விளையாட்டுவிழாவில் 440 யார் தடைதாண்டல் போட்டியில் டங்கன்வைற் தங்கம் பெற்றார். அடுத்து 1994ஆம் ஆண்டு கனடா விக்ரோறியாவில் இடம்பெற்ற பொதுநலவாய விளையாட்டுவிழாவில் புஷ்பமாலி ராமநாயக்காவும், மாலினி விக்கிரமசிங்கவும் பெண்களுக்கான ஏயார் றைபிள் இரட்டையர் போட்டியில் தங்கப்பதக்கத்தை வெற்றி கொண்டனர்.

1948இல் இலங்கை முதல் முறையாக ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டபோதும் குறிப்பிடத்தக்க வெற்றியொன்றைப் பெற்றது. லண்டனில் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய டங்கன்வைற் 400மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கமொன்றைப் பெற்றார். அடுத்து கடந்தமுறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் சுசந்திகா ஜயசிங்க 100மீ போட்டியில் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார். அடுத்து கனடா மொன்றியலில் 1976ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியைத் தவிர அனைத்துப் போட்டிகளிலும் கலந்துகொண்டதாயினும் இந்த இரண்டு பதக்கங்களை மட்டுமே பெறமுடிந்தது.

(தொடரும்)

**(தொகுப்பு: சு. கனகராசா**
**கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி)**

# சாதனைகளுடன் நிறைவடைந்த கிளி. மாவட்ட பிரதேச செயலக போட்டிகள்



கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான 19ஆவது மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் கடந்த மாதம் 29ஆம் திகதி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் எளிமையாக நிறைவு பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி. மாவட்ட அரச அதிபர் இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

இப் போட்டியில் கரைச்சிப் பிரதேச செயலகப்பிரிவு 221 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தையும், கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவு 155 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், பளை பிரதேச செயலகப்பிரிவு 54 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும், பூநகரி பிரதேச செயலகப்பிரிவு 10 புள்ளிகளையும் பெற்றன.

கடந்த வருடங்களை விட இம்முறை சமாதானம் ஏற்படுத்திய அனுகூலங்களில் விளையாட்டுத் துறையும் மேன்மை அடைந்துள்ளதை நடைபெற்று முடிந்த போட்டிகள் உணர்த்துவனவாக இருந்தன. இதனை உறுதிப்படுத்து மாப் போன்று முன்னைய ஐந்து மெய்வன்மைச் சாதனைகள் இம்முறை போட்டியில் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவற்றில் ஒரு சில போட்டிகள் மாவட்ட, மாகாண தரத்தை எட்டிப் பிடிக்கும் நிலையில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. இதில் க.சிவகுமார் குண்டெறிதல் போட்டியில் வடக்கு - கிழக்கு மாகாண சாதனையில் இருந்து 10 செ.மீற்றர் பின் தங்கியிருப்பது மெச்சத்தக்க விடயமாகும்.

இதேநேரம் அகில இலங்கை ரீதியில் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் வீரர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இதனால் மெய்வன்மைப் போட்டிகளில் ஓரளவு ஆதிக்கம் செலுத்தக் கூடிய வீரர்கள் வளர்ந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இருந்தும் குழு நிலைப் போட்டிகளில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ள போதும் வெற்றி வாய்ப்பு என்பது எட்டாத கனியாகவே உள்ளது. அது எட்டும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை அண்மைய உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையிலான போட்டி நிருபித்தது.

இப்போட்டியின் இறுதி நாளின் இறுதி நிகழ்வாக கரைச்சி, கண்டாவளைப் பிரதேச அணிகளுக் கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெற்றது.

மிகவும் பரபரப்பாகவும், விறு விறுப்பாகவும் நடைபெற்ற இப் போட்டியில் ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் கரைச்சிப் பிரதேச செயலக அணி மூன்று கோல்களை போட்டு இலகுவாக வெற்றி பெற்றது.

**சாதனை நிகழ்த்தியோர்**

01. குண்டெறிதல் : அன்ரன் அன்பழகன்- 9.69 மீற்றர் (1990) புதியசாதனை க.சிவகுமார் - 11.36 மீற்றர். மேற்படி சாதனை வடக்கு - கிழக்கு மாகாண போட்டியில் ஏற்படுத்தப்பட்ட சாதனையில் இருந்து 10 செ.மீற்றர் குறைவானது.

02. நீளம்பாய்தல் : தெய்வேந் திரம் 6.39 மீற்றர்(1983). புதிய சாதனை சே. கேதீஸ்வரன் 6.40 மீற்றர்.

03. 1500 மீற்றர் ஓட்டம் : ஜெயராசா 4 நிமிடம் 44 செக்கன் (2002). புதிய சாதனை ஜெ. கங்காநேசன் 4 நிமிடம் 4 செக்கன்.

04. ஈட்டியெறிதல் பெண்கள் : அம்பிகா 20.65 மீற்றர் (2001). புதிய சாதனை ச.ஜெயக்குமாரி 24.35 மீற்றர்.

05. குண்டெறிதல் பெண்கள் : கலாநிதி (1985), புதிய சாதனை அ.டயானா - 6.39 மீற்றர்.




அண்மையில் நடைபெற்று முடிந்த கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் சாதனை வீரர்கள் பரிசில்களைப் பெற்றுக்கொள்வதைப் படங்களில் காணலாம்.

# சூழலைப் பாதுகாத்து

எம்மைச் சுற்றியுள்ள உயிரற்றதும், உயிருள்ளதுமான பொருட்கள் அனைத்தும் சூழல் எனப்படும். எமது சூழல் இயற்கையாகவே சமநிலையில் உள்ளது. இச்சமநிலையானது எம்மைச் சூழவுள்ள இயற்கைத் தாவரங்கள் சில மனிதரின் சில நடவடிக்கைகளினால் பாதிப்படைகின்றது. இந்தப் பாதிப்பு நிலைமையையே சூழல் மாசடைதல் என்று சொல்லப்படும்.

இந்நிலைமையானது தற்போது மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டு வருகின்றது. இத்தோடு அபாயகரமான நிலையிலும் பல்கிப் பெருகிக்கொண்டு வருகின்றது. சனநெருக்கடி கூடுவதனால் உயிரின வாழ்க்கைச் சூழலில் நிரந்தரத்தன்மையைக் குறைத்து விடும். சூழல் மாசடைதல் என்று சொல்லப்படும் போது நீர், வளிமண்டலம், தரை போன்ற முக்கிய காரணிகளும் பாதிப்படைவதேயாகும். இந்த மூன்று முக்கியமான காரணிகளிலும் வளிமண்டலத்தைப் பாதிக்கும் காரணிகள் எவை என எடுத்து நோக்குவோம்.

இந்தக் காரணிகளில் மூன்றும் முக்கியமாக விவசாயச் செய்கைக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் வளிமண்டலத்தைப் பாதிக்கும் காரணிகளாக போக்குவரத்துக்கான வாகனங்களின் புகைகள், தொழிற்சாலைப்புகைகள், இயந்திர சாதனங்களின் புகைகள் என்பன அமைகின்றன. இவற்றால் வளிமண்டலம் பாதிப்படைகிறது. வளிமண்டலத்தைப் பாதிப்பதனால் ஏற்படும் விளைவுகள் எவை எனப்பார்ப்போம்.

வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வாயுவின் ($CO_2$) அளவும், காபன் மொனோக்சைட் வாயுவின் ($CO$) அளவும் காணப்படும். நச்சுத்தன்மையான பொருட்களை வெளிவிடுதல், அமிலமழை பெய்தல் போன்ற சில விளைவுகளும் ஏற்படும். அத்தோடு சூழலும் பாதிப்படையும். இந்நிலைமையைத் தவிர்க்க நச்சுத் தன்மையான பக்க விளைவுகளை ஏற்படுத்தும் பொருட்களைப் பயன் உள்ள பொருட்களாக மாற்றம் செய்யவேண்டும்.

அணுவாயுதக் கண்டுபிடிப்பும், போரும், ஆயுதப்போட்டிகளும், ஆயுதப்பரிசோதனைகளும் மிக வேகமாகச் சூழலைப் பாதிக்கின்றன. அத்தோடு சீமெந்துத் தொழிற்சாலைகள், கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் என்பன வளிமண்டலத்தில் தூசிதுணிக்கைகளைச் சேர்க்கின்றன. இதனைக்கட்டுப்படுத்த நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தூசிகளை வடிகட்டிவிடவேண்டும்.

## பச்சைவீட்டு விளைவும் பூமி வெப்பமடைதலும்

பூமியை வாயுக்களால் சூழப்பட்ட ஒரு பச்சை வீடாகக் கொள்ளலாம். இவ்வாயுக்கள் கண்ணாடியைப்போல் சூரியவெப்ப ஒளியை உட்செல்ல விட்டு மீண்டும் வெப்பம் இழக்கப் படுவதைத் தடுக்கின்றது. காபனீரொட்சைட் ($CO_2$) குளோரோ புளோரோகாபன் (CFC), மீதேன் ($CH_4$) ஆகிய வாயுக்கள் காரணமாக பச்சை வீட்டு விளைவு ஏற்படுகின்றது. இவ்வாயுக்கள் வெப்ப சக்தியை உறிஞ்சி வைத்துச் சூழலை வெப்பமடையச் செய்கின்றன. குளோரோ புளோரோ காபன் பாவித்தல்.

* குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் என்பவற்றின் பாவனையைக் குறைத்தல்.

* காடுகளைப் பாதுகாத்தல்.

* எரிபொருட்களுக்குப் பதிலாக வேறு இயந்திர சக்தி மூலகங்களைக் கவனமாகக் கைக்கொள்ளல். இந்நடவடிக்கைகள் மூலம் சூழல் மாசடையும் தன்மை குறைவாகக் காணப்படும்.

குளோரோ புளோரோக் காபன் காரணமாக வளிமண்டலத்தில் மிகமுக்கியமானதொரு பாதிப்பு ஏற்படுகின்றது. அப்பாதிப்பையே விமானங்களும், விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகச் செலுத்தப்படும் விண்கலங்களும் ஓசோன் படலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

பூமியின் மேற்பரப்பில் இருந்து 20 முதல் 50 கி.மீ தூரத்தில் இருந்து பூமியைச் சூழ ஓசோன் வாயுவினாலான மெல்லிய படலம் காணப்படுகின்றது. இப்படலமானது உயிரினங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஊதா கடந்த கதிர்கள் பூமியினுள் ஊடுருவுவதனைத் தவிர்த்துக் கொள்கின்றது. எனவே இவ்வரிய ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் நாம் அனைவரும் ஒத்துழைப்பு

# சுகத்தினைப் பேணுவோம்

வாயு குளிர்சாதனப் பெட்டி மூலம் அதிக அளவில் பூமியைச் சேருகின்றன. விவசாயச் செய்கையில் பூச்சி, களைத் தாக்கங்கள் ஏற்படும் போது கிருமி நாசினிகள், களைகொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்தும் போது போதியளவு பாதுகாப்புக்கள் எடுக்கப்படாமையினாலும் அசுத்தம் அடைகின்றது. விருத்தி செய்யப்பட்ட பின்வரும் விவசாயத் தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றுவதன் மூலம் விவசாய இரசாயனங்களால் சூழல் மாசடைவதனைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

* களைகொல்லிகளுக்குப் பதிலாக இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தலாம்

* உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாளல்.


* பௌதீக பொறிமுறைகளைப் பாவித்தல்.

ஓசோன் படலத்தில் ஏற்படும் பாதிப்பு என்று சொல்லப்படுகின்றது. அதன் சேதத்திற்குக் காரணம் குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்தும், வெவ்வேறு தொழில் நுட்பங்கள் மூலமும் வெளிவிடப்படும் குளோரோ புளோரோ காபன் ஆகும். அத்துடன் அதிவேக வழங்கி எமது சூழலைப் பாதுகாத்து நாமும் நலமுடன் வாழ்வதுடன் சூழலைப் பேணிச் சுகமாக வாழ்வோம்.

□□□

**சி.நிதி**

## சூழல் சுடர்




# வீதியோரங்களில் காணப்படும் பற்றைகளைத் துப்புரவாக்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பொழுதிலும் தங்கள் குடியிருப்புக் காணிகளுக்கு முன்னால் வீதிகளிற்கு அருகாமையிலுள்ள பற்றைக்காடுகளை அகற்றாமல் உள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

அநேகமான பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறியுள்ள பொழுதிலும் தங்கள் தங்கள் காணிகளுக்கு முன்னால் உள்ள பற்றைக் காடுகளை அழிக்காது உள்ளமையினால் போக்குவரத்துச் செய்பவர்கள் இவ்வீதிகளால் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றமையினைக் காணக் கூடியதாகவுள்ளது. இது குறித்து கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் கருத்துத் தெரிவிக்கையில்:

மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தங்கள் காணிகளை எவ்வாறு துப்புரவு செய்துள்ளனரோ அதேபோன்று காணியின் வெளிப்பகுதியினையும் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் துப்புரவு செய்ய வேண்டியது அவர்கள் ஒவ்வொருவரதும் பாரிய பணியாகும்.

எனவே, அந்தந்தப் பகுதி கி.சே. அலுவலர்கள் மக்களுடன் அணுகி மேற்படி பணியினை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (சோ)

# கிளி. கிராமிய பொ.அ. வங்கியில் கடன்களைப் பெறக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக் கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் ஐயனார் திட்ட உபகுழு டி-01, டி-04 திட்டக்குழு இராமநாதபுரம் கமக்கார அமைப்புக்களில் உள்ள விவசாயிகள் தமது கடன்களை இன்று பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியினூடாக 2002ஆம் ஆண்டு 427 பயனாளிகளுக்கு 4353500 ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு நான்கு கிராமிய வங்கிக் கிளைகளினூடாக வழங்கப்பட்ட மேற்படி கடன்கள் மீள் அறவீடு செய்து கமக்கார அமைப்புக்கள் 2003 ஆம் ஆண்டு சிறுபோக கடன் பெறுவதற்கு தமது விண்ணப்பங்களைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் களினூடாகப் பூர்த்தி செய்து வருகின்றனர்.(பா)

# மருத்துவபீட மாணவருக்கு புலமைப் பரிசில் நிதியுதவி

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் ஆவணங்கள் கடந்த 7ஆம் திகதியன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸிடம் கையளிக்கப்பட்டது.



துணைவேந்தரிடம் புலமைப் பரிசில் வைப்புச் சான்றிதழை சின்னரத்தினம் கையளிக்கிறார். அருகில் அவரது மகள் உருத்திராவும் காணப்படுகின்றார்

முன்னாள் வட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலரும் ஓய்வு பெற்ற அதிபருமான வல்வெட்டித் துறையைச் சேர்ந்த செ.சின்னரத் தினம், அவரது காலஞ் சென்ற துணைவியார் திருமதி.சி.வள்ளியம்மாள் ஞாபகார்த்தமாக ஒரு லட்சத்து முப்பத்து ஆறாயிரம் ரூபா (1,36,000 ரூபா) கொண்ட நிலையான வைப்புச் சான்றிதழ் புலமைப் பரிசிலுக்கென துணை வேந்தரிடம் கையளிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்டாவளைக் கிராமத்தில் 3 வீதிகள் புனரமைக்க முடிவு

(கண்டாவளை)

கண்டாவளைக் கிராமத்தில் மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. இது தொடர்பான வேலைகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் கண்டாவளை கிராமத்தில் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரின் அனுசரணையுடன் உலக உணவுத் திட்டத்திற்கு அமைவாக முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்க வேண்டிய வீதிகள் தொடர்பான கலந்துரையாடல், கிளி. கண்டாவளை ம.வி.யில் பிரதேச செயலக ஆளணி உத்தியோகத்தர் இரா.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் இப்பகுதி கிராம சேவகர் சி. வீரசிங்கம், பிரதேச செயலக உத்தியோகத்தர் அமிர்தலிங்கம், உள்ளூர் பொது அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியில் ஆவரம்காட்டு வீதி, பன்றி சுட்டான் வடக்கு வீதி, பன்றி சுட்டான் தெற்குவீதி (பத்தன் மோட்டை) ஆகிய மூன்று வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்க முடிவு செய்யப்பட்டது. புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் கிராமத்தைச் சேர்ந்த மனித வலுவை முழுமையாகப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (14)

## வேவு விமானம் நோட்டம்

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் சிறிலங்கா வேவு விமானமொன்று நேற்றுமுன்தினம் காலை எட்டு மணி தொடக்கம் 10 மணி வரை தாழப்பறந்து நோட்டமிட்டது. அதேவேளை புதுக்குடியிருப்புப் பகுதியிலும் இவ்விமானம் நோட்டமிட்டது. (20,26)

# உடையார்கட்டுப்பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு!

## - இரவில் திருடர் கைவரிசை

(உடையார்கட்டு)

உடையார்கட்டுப் பகுதியிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் அண்மை நாட்களாக தொடர் திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இரவு வேளைகளில் வீடுகளிலும், தோட்டக்காணிகளிலும் நுழையும் திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக பல இடங்களில் இடம்பெற்ற இத் திருட்டுக்களில் நீர் இறைக்கும் இயந்திரங்களும், கால்நடைகளும் களவாடப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் இப்போது பெரும் அச்சத்துடனேயே இரவுகளை கழிக்க வேண்டியவர்களாக உள்ளனர். (19)

## தற்கொலை முயற்சி

(மன்னார்)

மன்னார் நெசவுசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் இந்திய மீனவர்களில் ஒருவர் தற்கொலை செய்ய முயன்ற போது காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்தியா செல்ல முடியாது இருப்பதன் விரக்தி காரணமாகவே தற்கொலை முயற்சியை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் இம் மீனவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டு வருகின்றார்.

# இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்த பொ.ஐ.மு. கடும் நிபந்தனைகள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி எந்தவகையிலும் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டாது என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

ஆயினும் இடைக்கால நிர்வாகம் சில நிபந்தனைகளுடனேயே வழங்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் எட்டக்கூடிய இறுதித்தீர்வு தொடர்பான இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளில் ஒன்றாகும்.

அத்துடன் ஆயுதங்களை விடுதலைப்புலிகள் முழுமையாக தற்போது கீழே வைக்காவிட்டாலும் இறுதித்தீர்வின் பின்னர் ஆயுதங்களைக் கைவிடுவதாக எழுத்து மூலம உத்தரவாதம் ஒன்றை வழங்க வேண்டும்.

மக்கள் விடுதலைமுன்னணியுடன் இணைந்து கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி புதிய அரசாங்கம் ஒன்றை அமைத்தாலும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையிலேயே தீர்வுகள் காணப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளதை வரவேற்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறிலங்கா ஊர்காவல்படை சிப்பாய் சுட்டுக்கொலை

பொலநறுவை வெலிக்கந்தை பிரதேச செயலர் பிரிவில் முத்துக் கண்டல் பகுதியில் ஊர்காவல் படைச் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றுள்ளது. இவரது சடலம் நீரோடை ஒன்றில் இருந்து மீட்கப் பட்டுள்ளது.

## - வயலுக்கு நீர் பாய்ச்சுவதில் தகராறு - மண்வெட்டியால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

வயலுக்கு நீர் பாய்ச்சுவதில் ஏற்பட்ட வாய்த்தகராறு கை கலப்பாக மாறியதையடுத்து மண்வெட்டியால் தாக்கப்பட்ட இளைஞரொருவர் தலையில் பலத்த வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட 01ஆம் கட்ட வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் காலை உருத்திரபுரம் குஞ்சுப் பரந்தன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வயலுக்கு நீர்பாய்ச்சுவதில் ஏற்பட்ட தகராறே இச்சம்பவம் இடம்பெறக் காரணமாக அமைந்துள்ளதென தெரியவந்துள்ளது.

கரன் (வயது - 18) என்ற இளைஞரே மேற்படி வெட்டுக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் கிளி. 01ஆம் கட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு கிளி. அக்கராயன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மண்வெட்டியால் வெட்டிய சந்தேக நபரை கிளிநொச்சி காவல் பணிமனையினர் உடன் கைது செய்ததுடன் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)


# கேள்வி அறிவித்தல்

## முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோருக்கான உலருணவு நிவாரணத்திற்கு கோதுமை மாவு(பிறிமா) வழங்குவதற்கான கூறுவிலை

**மேற்படி காரணத்திற்காக 2003 ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 250 மெ.தொன் கோதுமை மாவு வழங்குவதற்காக உள்ளூர் முகவர்களிடமிருந்து முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபைத் தலைவரால் கேள்வி கோரப்படுகின்றது.**

| விநியோகிக்கப்பட வேண்டிய ப.நோ.கூ.சங்கம் | விநியோகிக்கப்பட வேண்டிய தொகை[கி.கிராமில்] | | |
|---|---|---|---|
| | ஜூலை | ஆகஸ்ட் | செப்ரெம்பர் |
| 01. கரைதுறைப்பற்று | 65,000 | 65,000 | 65,000 |
| 02. புதுக்குடியிருப்பு | 70,000 | 70,000 | 70,000 |
| 03. விசுவமடு | 15,000 | 15,000 | 15,000 |
| 04. முத்து ஐயன்கட்டு | 13,000 | 13,000 | 13,000 |
| 05. வவுனியா வடக்கு | 34,000 | 34,000 | 34,000 |
| 06. பனங்காமம் பற்று | 21,000 | 21,000 | 21,000 |
| 07. துணுக்காய் | 32,000 | 32,000 | 32,000 |
| | 250,000 | 250,000 | 250,000 |

**நிபந்தனைகள்:-**

2) கூறுவிலைகள் ஒரு கிலோவிற்கு எவ்வளவு எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

3) 2003 ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குத் தேவையான கோதுமை மாவினை விநியோகிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். இதனைக் கூறுவிலையில் உறுதிப்படுத்த வேண்டும்.

4) எம்மால் கோரப்படும் வர்க்க கோதுமை மாவினை மட்டுமே விநியோகிக்கவேண்டும்.

5) விநியோகிக்கப்படும் மா தரமானதாகவும், மனித பாவனைக்கு உகந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

**கேள்விகள்**

1) கேள்வி கோருநர் மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/= மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் 2003.06.12 ஆம் திகதிக்கு முன்செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கும், சமாசங்களுக்கும் வைப்புப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2003.06.23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் கேள்விச் சபைத் தலைவர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என முகவரி இடப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப்பத்திர உறையில் இடதுபக்க மூலையில் 'நிவாரணத்திற்கான மா விநியோகம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் யாவும் அன்றைய தினம் பி.ப.04.00 மணிக்குத் திறந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்தருணம் கேள்வி கோருநர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

**(இமெல்டா சுகுமார்)**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு.**

(சி-8131)

# சமாதான முயற்சிகளை பலப்படுத்தி உச்சப் பலனைப் பெற அரசு தவறிவிட்டது

## - புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கருத்து



விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் மீண்டும் கலந்து கொள்ளவும், ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கும் செல்வதாயின் இடைக்கால நிர்வாக அமைப்பைக் கோரியுள்ளமை அரசியலில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்நிலையில் அது பற்றி புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்னவிடம் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கு அவர் கூறும் கருத்துக்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

கேள்வி : இந்த ஒன்றரை வருடகாலம் குண்டு வெடிப்புகள், துப்பாக்கி வேட்டுக்கள் என்பன ஒழிந்து சமாதானச் சூழ்நிலையில் சரியோ பிழையோ ஒரு அபிவிருத்திப் பணி தொடங்கியுள்ள நிலையில் புலிகள் பேச்சுக்களில் இருந்து நீங்கியமை, சனாதிபதி அபிவிருத்தி லொத்தர் சபையை சுவீகரித்தமை, வெள்ள அழிவு என்ற பெரும் சோதனைகளுக்கு நாடு முகம் கொடுத்துள்ளது. இந்த நேரத்தில் நிலவும் அரசியல் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் : யார் யாரோ சேர்ந்து ஒரு அதிசயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உண்மைதான். அதற்குத் தேவையான சூழ்நிலை உருவானது சமாதானப் பேச்சுக்களினாலேயே. எனினும், அதன் உச்சப்பயனைப் பெறுவதற்கு அரசு தவறிவிட்டது. சமாதான இயக்கத்தைப் பலப்படுத்தி முன்னோக்கி நகர்த்த அரசுக்கு முடியவில்லை. மீள் குடியேற்றத்தை துரிதமாக்கவில்லை. அதற்கான நிதியும் கிடைக்கவில்லை. இதனால் புலிகள் விரக்தியடைந்துள்ளதாகத் தெரிகிறது. இதன் பின்னணியில் அவர்கள் பேச்சுக்களிலிருந்து நீங்கியது கூட பெரும் பிரச்சினையாகியுள்ளது. இதனை ஆராயவென நம்பியாரை நியமித்தமையும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அவர் இந்தியராயினும் பணக்கார நாடுகளின் பிரதிநிதியாகவே செயற்படுகிறார். அதற்கிடையில் பொ.ஐ.மு - ஜே.வி.பி. கூட்டணி சாத்தியமாகும் என அவர்கள் கருதுகிறார்கள். ஜே.வி.பி. மண்டியிட்டாவது வந்து பணக்கார கட்சியுடன் இணைந்து செயற்பட முனைகிறது. அதனால் ஆளுங் கட்சிக்குக் குழிதோண்டிவிட்டு அரசைக் கைப்பற்ற சனாதிபதியும் முனைகிறார். அதன் ஒரு அங்கமே லொத்தர் சபை விவகாரம். அது சாத்தியமாகினால் சிவில் யுத்தம் ஒன்று தோன்று வது நிச்சயம். சனாதிபதியின் இந்த நோக்கம் நிறைவேறினால் மேலும் இம்மாதிரியான பல வேலைத்திட்டங்கள் சனாதிபதியால் நிறைவேற்றப்படும்.

இதனால் புலிகள் அரசுடன் பேசிப்பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவர். கடன்வழங்குநர்களும் விலகிவிடுவர்.

கேள்வி : இப்படியான சந்தர்ப்பத்தில் இடது சாரிகளின் பொறுப்பு எப்படியானதாக இருக்க வேண்டும். அதற்கான சக்தி அவர்களிடம் இருக்கின்றதா?

பதில் : நல்ல கேள்வி. இடது சாரியினருக்கு இவ்விடத்தில் பொறுப்புக்கள் உள்ளன. இராணுவத்தையும், பொலிசையும் இதற்குள் புகுத்துவதையும் சர்வதேச அழுத்தங்களையும் விடுத்து சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இது நல்ல தருணம். இடது சாரிகள் இணைந்தால் மட்டுமே இப்பிரச்சினைக்கு முடிவு கட்டலாம். அத்துடன் பொ.ஐ.முன்னணியில் இருக்கும் இடதுசாரிகளையும் இணைப்பது கடினமல்ல. இனவாதிகளுக்கு இடமளிக்காமல் சமாதானப் பாதையை மீளமைக்க வேண்டும்.

கேள்வி : சனாதிபதி, தான் லொத்தர் சபை விவகாரம் பற்றி பேசுகையில், எந்தவித சட்ட விரோத செயலிலும் ஈடுபடவில்லை என்கிறார். ஆளுங்கட்சியோ சனநாயக ரீதியில் மக்களால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை சனாதிபதியின் அதிகாரத்தால் பெற முடியாது என்று கூறுகிறது. இந்த கயிறிழுத்தலில உங்களின் கருத்து என்ன?

பதில் : இரு பகுதியினதும் விவாதம் சரி. சனாதிபதி உயர் நீதிமன்றுக்குச் சென்றால் அவருக்குச் சாதகமான அதாவது அரசியலமைப்பின் படியே அவர் செயற்பட்டதாக தீர்ப்பு வழங்கப்படலாம். எனினும் அரசியலமைப்பு விடயங்கள் எவ்வேளையிலும் கொள்கை ரீதியானதாக அமையாது. அரசியலமைப்பின்படி 82ஆம் ஆண்டில் மக்கள் கருத்துக் கணிப்பொன்று நடைபெற்றது. நாங்கள் அதை பொருட்படுத்தவில்லை. இது அரசியலமைப்புக்கு முரணானது என்று நான் வாதிட்டதால் சிறைக்கு அனுப்பினார்கள். இப்போது அந்த தவறை உணர்ந்தவர்கள் (ஐ.தே.க.) எனக்கு பல்கலைக்கழகத்தில் பதவி வழங்கப்பட வேண்டும் என்கின்றனர். அதனால் அரசமைப்பின்படி சரி என்பது தர்மத்தின்படி பிழையாக எதிர்காலத்தில் தெரியவருகிறது. சனாதிபதி லொத்தர் சபையை எடுத்தது, கொள்கை ரீதியானதாகக் கொள்வது அது மக்களுக்கு எவ்வளவு தூரம் நன்மையளிக்கிறது என்ற பின்னணியிலேயே. ஆயினும் அது இனவாத போரிடும் சக்திகளுக்கு உற்சாகமூட்டுவதன்றி மக்களுக்கு நன்மை பயப்பனவாகத் தோன்றவில்லை. இடது சாரிகளும் இதனை ஏற்றுக் கொள்ளாதது மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காததாலேயே: ஆனால் மக்கள் செல்வாக்குப்பெற்ற ஆளுங் கட்சி இச்செயலை தவறெனக் கொள்வதையும் நாம் ஏற்கமுடியாது. ஏனெனில் அதே மக்களின் ஆதரவு சற்றுக் குறைவதாகப் படுகிறது. எனினும் சமாதானச் செயற்பாட்டில் மக்கள் அரசுக்கு ஆதரவாக இருக்கின்றனர். வடக்கில் என்றால் என்ன தெற்கில் என்றால் என்ன நாட்டின் எந்தக் கோணத்தில் உள்ள மக்களும் சமாதானத்தையே விரும்புவர். அதனிடையில் சந்திரிகாவின் நாடகத்தை சாதாரணமாகக் கொள்ள முடியாது.

கேள்வி : லொத்தர் சபை விவகாரத்தினால் நிறைவேற்றதிகாரத்துடன் ஆளும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ளும் நோக்கமாக பொ.ஐ.மு. செயற்பட்டதாக ஏற்றுக்கொள்வீர்களா?

பதில் : ஆம். இது ஒரு பலப்பரீட்சையாகவும் இருக்கலாம். தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி லொத்தர் சபையை சுவீகரித்தது மக்களினதும் பாராளுமன்றத்தினதும் பிரதிபலிப்பு என்னவாக இருக்கும்? என்று அறிய முற்பட்டிருக்கலாம். பாராளுமன்றத்தைக் கலைத்தால் நிலைமை எப்படியாகும்? என்று மனத்திரையில் சந்திரிகா காண விரும்பியிருக்கலாம். ஜே.வி.பி. - பொ.ஐ.மு. இனவாதிகளால் இந்த எண்ணம் ஊற்றெடுத்திருக்கலாம். இடது சாரிகளுக்கோ, ஏன் மகிந்த ராஜபக்ஷவுக்கோ இந்த எண்ணம் இல்லை என்று தான் கூறலாம். கூட்டணி சேர்ந்து அரசை கலைக்கும் திட்டம் ஜே.வி.பி.யிடம் இருக்கிறது. அதன் நகர்த்தலினால் சந்திரிகா அப்படி ஒரு புரளியைக் கிளப்பியிருக்கக் கூடும். ஆனால், இப்போது லொத்தர் சபையுமில்லை. வர்த்தமானியுமில்லை. பதவி கவிழ்ப்பும் நடைபெறவில்லை. சட்டத்துக்கு முரணான சட்டங்களைப் பிறப்பித்தலினால் இப்போது எந்தத் திசையிலிருந்தும் சந்திரிகாவுக்கு சிவப்பு விளக்கே காட்டப்படுகிறது.

கேள்வி : அரசியலமைப்பின்படி சனாதிபதி கையெழுத்திட்டவுடன் அது சட்டமாகும் எனவும் வர்த்தமானி அறிவித்தல் அவசியமில்லை என்ற ஒரு கருத்தும் இருக்கின்றதல்லவா?

பதில் : அது உயர் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியதேயன்றி அது அப்படி, இது இப்படி என்று யாரும் கூறமுடியாது. இதில் பல்வேறு பக்கங்கள் உள்ளன. வர்த்தமானி அறிவித்தலுக்குட்பட்டவை, உட்படதாவை என இருக்கின்றன. அவசரகாலச் சட்டத்தை நோக்கினால் அது பிரகடனப்படுத்தப்பட்டவுடன் செயற்படும். வர்த்தமானியின் மதிப்பு அதனை அனுசரிக்கும் அதிகாரிகளினாலேயே ஏற்படுகிறது.

கேள்வி : லொத்தர் சபை விவகாரம் என்ன வாகும்? சனாதிபதி தமது நிலைப்பாட்டை மாற்றாதது போல அதன் நிர்வாகம் அரசின் கீழேயே இருக்கின்றதா?

பதில் : எதனையும் நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு நீதிமன்றம் செல்ல மனச்சாட்சி என்ற பெரும் பிரச்சினை இருக்கிறது. இப்போது அரசும் மௌனமாக இருக்கிறது. இவ்விரு பகுதியும் திருட்டுத்தனமாக கற்கள் பொறுக்கியவர்கள் போல இருக்கிறார்கள். இந்நிலை தொடர்ந்தால் மக்கள் வீதிக்கு இறங்கிவிடுவார்கள். மக்களின் பக்கமே அதிகாரிகள் இருப்பார்கள். அவர்கள் சட்டத்தை கட்டிக்கொண்டு கடலில் விழ மாட்டார்கள். இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல ஜே.வி.பி.யின் ஆதரவு மட்டுமே இருக்கிறது. வேறு ஒரு வழியுமில்லை.

கேள்வி : சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்க புலிகள் இடைக்கால சபையை நிபந்தனையாக முன்வைப்பதாகவும் நாட்டைப் பிரிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவதாக சிலர் கூறுவது போல தெரிகிறதல்லவா?

பதில் : இந்த சந்தர்ப்பத்தில் தெற்கில் இனவாதிகளுக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு உயிர் கொடுக்கப்பட்டுள்ளதால் விடயம் பிழைத்துபோய் மீண்டும் யுத்தம் ஏற்படலாம் என அவர்கள் நினைப்பார்கள். தெற்கில் இவ்வாறான எதிர்ப்புத் தோன்றி அரசும் அதற்கு அடி பணிந்தால் நானே பிரபாகரனாக இருந்தாலும் சமாதானத்தையே நம்பியிருக்கமாட்டேன். அநுராவும் வீரவன்சவும் ஏதாவதொரு வழியில் தமது பலத்தை அதிகரித்துவிட்டால், யுத்தத்துக்கு போக வேண்டி வரும் என பிரபாகரனுக்குத் தெரியும். அதற்காக இப்பொழுது முதலே ஆயத்தப்படுத்துவதாகவும் இருக்கலாம். என்னவென்றால் இந்த அரசும் ஒரு திடகாத்திரமானதாகக் கருதமுடியாது தானே.

மொழியாக்கம்: வடிவேல்

---

# சீனன் குடா எரிபொருள் களஞ்சிய தொகுதி நவீன மயமாக்கல் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

திருகோணமலை - சீனன் குடாவில் உள்ள எரிபொருள் களஞ்சியத் தொகுதியை நவீன மயமாக்கும் திட்டம் கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா எண்ணெய், இயற்கை வாயு அமைச்சர் ராம் நாயக் இதனை ஆரம்பித்து வைத்தார்.

சீனன் குடாவிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன வளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதுவர் நிருபம் சென், இந்திய எண்ணெய், வாயு வளத்துறையமைச்சின் செயலர் சதுர்வேதி, கூட்டுத்தாபன தலைவர் இராமச்சந்திரன், லங்கா - இந்திய கூட்டு எண்ணெய் கூட்டுத்தாபன தலைவர் நாயக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய நாயக் தெரிவிக்கையில் 99 கொள்கலன்களில் 15 மட்டுமே தற்போது செயற்படுகின்றதாகவும் மேலும் இத்திட்டம் நவீன முறைக்கு விஸ்தரிக்கப்படும் எனவும் கூறியுள்ளார். நவீனமயப்படுத்தலில் முதற்கட்டமாக 190 மில் இல. ரூபாய்கள் (1.9 டொலர்கள்) முதலீடு செய்யப்பட்டு அத்திட்டம் இவ்வருடம் மார்கழி மாதமளவில் நிறைவு பெறும் எனவும் இத்திட்டத்திற்கான முழுச் செலவும் 3 ஆயிரம் மில்லியன் இல ரூபாய்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தத் லங்கா - இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் குத்தகை முறையில் பாவனைக்கு விடப்படும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சனாதிபதியின் கவனத்தில்

(கொழும்பு)

நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்படாதோரை மாகாண சபை அமைச்சர்களாக நியமிக்க முடியாது என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கவனத்தில் எடுத்து மேற்கொண்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தீர்ப்பினை அடுத்து இரு மாகாண முதலமைச்சர்களான பட்டி பிரேமலால் திசாநாயக்கா, (வ.ம.மா.) றெஜினோல்ட் கூரே (மே.மா) ஆகியோரின் பதவிக்காலம் கேள்விக் குறிக்குள்ளாகியிருக்கின்றது. இதன் காரணமாக பல பொ.ஐ.மு. சிரேஷ்ட உறுப்பினர்கள் இப்பதவிகளுக்கு முண்டியடிப்பதாகத் தெரிகிறது.

சரத் அமுனுகம கூறும்போது சனாதிபதி இது தொடர்பில் முடிவெடுப்பார் எனக் கூறியுள்ளார்.

# சிறைகள் நிரம்பி வழிவதால் - கைதிகளை வேறிடங்களில் தடுத்து வைக்க ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா சிறைச்சாலைகளில் இருநூற்றைம்பது பேர் தடுத்துவைக்கக் கூடிய இடத்தில் எண்ணூறு பேருக்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதனால் சிறிய குற்றச்செயல்களுக்காக தடுத்து வைக்கப்படுவோரை பொலிஸ் நிலையங்களிலும், வேறு இடங்களிலும் தடுத்து வைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இராணுவத்திற்குத் தகவல் வழங்குவோரில் இதுவரை 24 பேர் கொலையுண்டனர்

## பாதுகாக்கவில்லை என சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவ புலனாய்வு உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கென அரசாங்கம் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு தகவல் வழங்குவோரில் 24 பேர் இதுவரை கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய இராணுவ புலனாய்வு உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவம் உச்ச நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத்கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில் இவர்களது பாதுகாப்பை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கேள்வி அறிவித்தல்

## புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசி கொள்வனவு

**முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேள்விச் சபைத் தலைவரால் புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசி மாதம் ஒன்றிற்கு 400 மெ. தொன் இம்மாவட்டத்தில் உலருணவு விநியோகத்திற்காக கொள்வனவுசெய்து பின்வரும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைக்கூறு கோரப்படுகின்றது.**

| வழங்கப்படவேண்டிய ப.நோ.கூ.சங்கம் | வழங்கப்படவேண்டிய அரிசியின் அளவு [மெ.தொன்] | | |
|---|---|---|---|
| | ஜூலை | ஆகஸ்ட் | செப்ரெம்பர் |
| 01. கரைதுறைப்பற்று | 108 | 108 | 108 |
| 02. புதுக்குடியிருப்பு | 110 | 110 | 110 |
| 03. விசுவமடு | 20 | 20 | 20 |
| 04. முத்துஐயன்கட்டு | 17 | 17 | 17 |
| 05. வவுனியா வடக்கு | 55 | 55 | 55 |
| 06. பனங்காமம்பற்று | 40 | 40 | 40 |
| 07. துணுக்காய் | 50 | 50 | 50 |
| | 400 | 400 | 400 |

### 1. தன்மை

மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- இம்மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு அலுவலகத்தில் 2003-06-12ஆம் திகதிக்கு முன் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கும், சமாசங்களுக்கும் வைப்புப் பணத்திலிருந்து விதிவிலக்களிக் கப்படும். கேள்வியாளர்கள் 2003-06-23ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் கேள்விப்பத்திரங்கள், கேள்விச்சபைத் தலைவர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என முகவரியிடப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்படவேண்டும். கடித உறையின் இடது பக்கத்தில் 'புழுங்கல் சிவப்பு நாடு அரிசிக் கொள்வனவு' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்குத் திறக் கப்படும். அச்சமயம் கேள்வி கோருநரோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ கலந்து கொள்ளலாம்.

02. ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டு கேட்பாளரும் ஒரு விலைக் குறிப்பீட்டையே அனுப்பமுடியும். மேலதிக விலைக்கூறு அனுப் பினால் ஒவ்வொரு மாற்று விலைக்குறிப்பீடும் தனியான விலைக் குறிப்பீடு கடப்பாட்டுடன் அனுப்பப்படவேண்டும்.

### 03. வரையறைகள்

1. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. அரிசி நடப்பு வருட வேளாண்மையிலிருந்து எடுக்கப் பட்டதாகவும், குமையாத வர்க்கத்தைச் சேர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்கு தீட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. இலங்கை தரத்தின் பிரகாரம் உடைவு 15%இற்கு கூடாமல் இருத்தல் வேண்டும். (தானியங்கள் முழு அளவில் 3/4இலும் குறைவானவை உடைந்தவையாக எண்ணப்படும்)
5. ஈரலிப்பு 14%இற்கு மேற்படலாகாது.
6. சேதமடைந்ததும், நிறம் மாறியதுமான தானியங்களின் கூடுதல் அளவு 2%.
7. கலப்பு 2%இற்கு மேற்படலாகாது.
8. பிறபொருட்கள் 0.5%இற்கு மேற்படலாகாது.
9. வெள்ளை அரிசி 5% இற்கு மேற்படலாகாது.
10. ஒரு கிலோ கிராம் அரிசியில் இருக்கும் நெல் 10இற்கு மேற்படலாகாது.

### 04. விலைக்குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாடு பேணல்

கேள்வி அறிவித்தலில் குறிப்பிடும் அளவிற்கு ஒரு மெற்றிக் தொன்னுக்கு ரூபா 600/-க்கு குறையாமல் விலைக்குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாட்டைப் பேணும் வகையில் பின்தொடர வேண்டும். (இவை அரச நிறுவனங்களுக்கும் பொருந்தும்) விலைக்குறிப்பீடு ஒப்பந்தக் கட்டுப்பாடு இலங்கையில் இயங்கும் ஏதாவது வர்த்தக வங்கியால் வழங்கப்பெறும் உத்தரவாதமாக இருத்தல் வேண்டும். இம்மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங் களுக்கு விதிவிலக்களிக்கப்படும்.

### 05. செயல் நிறைவேற்ற ஒப்பந்தக் கட்டுப்பாடு

தெரிவு செய்யப்பெறும் ஒப்பந்தக்காரர்கள் இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியில் வழங்கப்பெறும் வங்கி உத்தர வாதம் கொண்டதாக இருக்கவேண்டும். இந்த உத்தரவாத வழங்குநருக்கு கட்டளை இடம்பெறும் அளவில், பெறுமதியில் 10%இற்குக் குறையாமல் இருக்கவேண்டும். இந்த ஒப்பந்தக் கட்டுப்பாடு பணம் வழங்கல் முடிவடைந்ததும் விடுவிக்கப்படும்.

### 06. மாதிரிக்கூறுகள்

கீழ்க்கண்ட மாதிரிக்கூறுகள் கேள்விச்சபை செயலாளரிடம் விலைக்குறிப்பீடு மூடப்படுவதற்கு குறிக்கப்பெற்ற நாளுக்கும், நேரத்திற்கும் பிந்தாமல் கையளிக்கப் பெறவேண்டும்.

அ) 04 சிறு சிப்ப(          ) மாதிரிக்கூறுகள் தகுதியான துண்டில் குறிப்பிட்டு ஒவ்வொரு உரிமை வழங்குநரால் தரப்படவேண்டும். ஒவ்வொரு சிறு சிப்பமும் 250 கிராமுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

ஆ) 04 வெற்று பொலித்தீன்/சாக்கு பைகள் இதற்காகப் பயன்படுத்துவதுடன் துண்டில் பதிந்திட வேண்டும். மாதிரிக்கூறுகள் வழங்கப்பெறாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

**07.** கேள்விகள் பரிசீலனை செய்யும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை எக்காரணம் கொண்டும் சந்தை விலையிலும் பார்க்க அதிகமாக இருக்கமாட்டாது.

### 08. கடன் காலப்பகுதியும், கொடுப்பனவு நிபந்தனைகளும்

ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியோர் கடன் காலப்பகுதி, வழங்கப்பெறும் நாளிலிருந்து 45 நாட்கள் அனுமதிக்கவேண்டும். வழங்கலுக்கான கொடுப்பனவு தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பெறும். தரம் தொடர்பாக 03ஆம் பந்தியில் குறிப்பிட்டதற் கிணங்க சான்றிதழின் பேரில் வழங்கப்பெறும்.

**09.** கேள்விச் சபைக்கு கேள்வி எதனையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை உண்டு. கேள்வியாளர் பொருள் தேவைப்படும் எந்த அளவுக்கட்டளைக்கு ஏற்ப தான் குறித்த விலையில் வழங்க வேண்டும்.

**(இமெல்டா சுகுமார்),**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-8132)

## சிந்தனைக்கு

எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-06-2003

## எதிர்பார்ப்பதற்கு எதுவுமில்லை!

"தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு விடுதலைப்புலிகள் மேலும் சற்று நெகிழ்வுப் போக்கைக் கடைப் பிடிக்க வேண்டும்" என்ற சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையானது தமிழ் மக்கள் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்ப்பதற்கு எதுவுமே இல்லை என்றதொரு நிலையையே தோற்றுவிப்பதாகவுள்ளது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதுவரையில் விடுதலைப்புலிகள் இறங்கி வரவேண்டும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். "நிபந்தனைகளை விதிப்பது சுலபம். ஆனால், நிறைவேற்றுவது கடினம" எனத் தெரிவிக்கும் அவர், "நாட்டின் சட்ட திட்டங்களுக்குள் தான் அரசாங்கம் செயற்பட முடியும்" எனவும் தெரிவித்துள்ளார். இதன்பிரகாரம், விடுதலைபபுலிகள்அதிகாரங்கள் குறித்த கோரிக்கைகள் எதையும் முனவைக்காது, சிறிலங்கா அரசின் அரசியல் யாப்பிற்குட்பட்ட விதத்தில் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப் படுவதற்கெனவும், அது முன்னேற்றம் காண்பதற்கெனவும், அது முறிந்து போகாது பாதுகாக்கப்படுவதற்கெனவும், செய்த விட்டுக் கொடுப்புக்கள், சந்தித்த இழப்புகள், காத்துவந்த பொறுமை என்பன மிகவும் அதிகம். வழமைக்கு மாறானது. அதாவது எல்லைக்கு மீறிய அளவில் இருந்ததென்பதே யதார்த்தமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கென நான்கு மாதங்களுக்கு மேலாக ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் உறுதியுடன் கடைப்பிடித்தனர். இக்காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பல இராணுவ நடவடிக்கைகளினால், நூற்றுக்கணக்கான போராளிகளைப் புலிகள் இழந்தனர். தமது கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தின் ஒரு பகுதியையும் பறிகொடுக்க வேண்டியதாகியது.

இதன் பின்னர், யுத்த நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதோடு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சமஷ்டி முறையிலான ஆட்சி முறை ஒன்றைப் பரிசீலிப்பதற்கு தயாரெனப் புலிகள் இயக்கம் பெரும் விட்டுக்கொடுப்பொன்றைச் செய்தது. அதாவது பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய விதத்தில் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத்தயாராக இருந்தது.

மாறாக, யுத்தநிறுத்த உடன்பாடு சிறிலங்கா ஆயுதப் படையினால் பாரிய அளவில் மீறப்பட்ட சம்பவங்கள் பல நடந்துள்ள போதும், விடுதலைப்புலிகள் அளவிற்கு மீறிய பொறுமை காத்தனர். குறிப்பாக காஞ்சிரங்குடாவில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை, நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்த சம்பவம், மானிப்பாயில் பெண் போராளிகள் மீதான தாக்குதல், சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதல் போன்ற யுத்தநிறுத்த மீறல்கள் சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

இதேவேளை, யுத்தநிறுத்த உடன்பாட்டின் பல அம்சங்கள் நிறைவு செய்யப்படாமலும், பின்னர் புலிகள்–அரசு பேச்சுவார்த்தையின் போது தீர்வு காணப்பட்ட விடயங்கள் பல இன்னமும் அமுல் செய்யப்படாமலும் உள்ளன. எடுத்துக் காட்டாக இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல், மீளக்குடியேறுதல் போன்ற விடயங்களில் சிறிலங்கா ஆயுதப்படையும் சரி, சிறிலங்கா அரசாங்கமும் சரி அதற்கு ஒத்துழைப்பு/ஆதரவு வழங்கவில்லை என்றே கூறலாம்.

இந்த வகையில் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்று செய்வதற்கு இறங்கி வந்ததில் இருந்து – அதாவது காட்டிய நெகிழ்ச்சிப் போக்கில் இருந்து இன்று வரையில் பெரும் பயன் எதுவும் கிட்டாத நிலையிலும் சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மென்மையான / நெகிழ்ச்சிப் போக்குடைய நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வந்துள்ளனர். விடுதலைப்புலிகளின் கடந்தகால வரலாற்றைப் பார்க்கும் போது இது தெரியவரும்.

ஆனால், இத்தனைக்கும் அதாவது – யுத்தநிறுத்தத்தில் இருந்து இன்று வரை அரசு நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடித்ததாக இல்லை. யுத்தநிறுத்தம் ஒன்றிற்கும் சமாதான பேச்சுவார்த்தைக்கும் சிறிலங்கா அரசாங்கம் இறங்கி வந்தமையானது சமாதானத்தின் மீது கொண்ட பற்றுதல் அல்ல, அதன் இராணுவ– பொருளாதார ரீதியிலான இயலாமையின் வெளிப்பாடே ஆகும். இந்தவகையில், சமாதானத்திற்கான பங்களிப்பு என்ற ரீதியில் அரசாங்கம் செய்துள்ள விட்டுக் கொடுப்பானது எதுவுமில்லை என்றே கூறலாம்.

இந்நிலையில், தற்பொழுதும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைப் போக்க விடுதலைப்புலிகள் விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டும் எனக் கோருவதும், அரசாங்கம் அரசியல் யாப்பிற்குட்பட்டே செயற்படும் எனக் கூறுவதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கொடுப்பதற்கோ அன்றிப் பகிர்ந்தளிப்பதற்கோ எதுவுமே இல்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது. அவ்வாறு இல்லாது விட்டால் அரசியல் யாப்பிற்கு உட்பட்டுச் செயற்படும் வகையில் புலிகளை இறங்கி வருமாறு அவர் கோரியிருக்கமாட்டார். ஏனெனில், சிறிலங்காவின் அரசியல் யாப்பை நிராகரித்தே விடுதலைப்புலிகள் போராட்டத்தைத் ஆரம்பித்தனர் என்பதே வரலாறாகும்.

# வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தைக் கூட வழங்க அரசு பின்னடிப்பது சந்தேகமளிக்கிறது

### கூட்டமைப்பு தென்; வட - அயர்லாந்து பிரதிநிதிகளிடம் தெரிவிப்பு

வட-கிழக்கு இடைக்கால நிர்வாக சபையினைக் கூட வழங்க அரசாங்கம் பின்னடிப்பது சமாதான முயற்சிகள் தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்து கின்றது. என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தென்னாபிரிக்கா, வட-அயர்லாந்து பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சி பிரச்சினையைத் தீர்க்க முயன்றால் எதிர்க்கட்சி அதனை எதிர்ப்பது வழமையாகிவிட்டது.

தமிழர்களுக்கு எதனையும் கொடுக்கக்கூடாது என இவர்கள் நினைக்கிறார்கள். வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவது அவசியமாகும். இடைக்கால நிர்வாக சபையினை அமைப்பதற்கு அரசாங்கம் பின்னடிப்பது சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூட்டமைப்பினர் எடுத்துக் கூறினர்.

இச்சந்திப்பில் தமது நாடுகளில் சமாதான முயற்சி நடைபெற்ற வேளைகளில் ஏற்பட்ட அனுபவங்கள் குறித்து தென்னாபிரிக்கா, வட-அயர்லாந்து பிரதிநிதிகள் கூட்டமைப்பினருக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

மேற்படி சந்திப்பு கடந்த புதன் கிழமை இடம் பெற்றமை தெரிந்ததே.

# இடைக்கால சபைக்கு சில கட்சிகள் எதிர்ப்பு; அரசாங்கத்திற்கெதிராகக் கடும் விமர்சனம்!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால அதிகாரசபை வழங்கும் அரசின் யோசனைக்கு சிறிலங்காவில் நேற்று முன்தினம் பல்வேறு அரசியல் கட்சிகள் தமது ஆட்சேபனையை வெளியிட்டுள்ளன.

சிகல உறுமைய கட்சித் தலைவர் திலக் கருணாரத்ன தாம் இந்தப் பிரேரணையை முற்றாக நிராகரிப்பதாகவும் இத்திட்டத்தினால் சிறிலங்காவின் ஆட்சியதிகாரம் அச்சுறுத்தலுக்குள்ளாவதாகவும் முழுப்பலத்தையும் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இதனை எதிர்க்கப் போவதாகக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளையும் உதவி வழங்கும் நாடுகளையும் அனுசரித்து மேற்சொன்ன இடைக்கால சபையை வழங்குவதன் மூலம் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் பொ.ஐ.மு, ஜே.வி.பி கட்சிகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன என்றும் கூறினார்.

இதற்கிடையில் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தன இவ்விடைக்கால சபை பற்றி கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த அரசு புலிகளோடு நடத்தும் அடுத்த நாடகம் என்று கூறும் அவர், மக்களைப் பிழையான வகையில் வழிநடத்தி வடக்குக் கிழக்கைப் புலிகளுக்கு விட்டுக் கொடுக்கத் திட்டம் இடுகிறது என்று கூறியிருக்கிறார்.

சமசமாஜக்கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன் புலிகளுக்கு அனுப்பிய பிரதமரின் கடிதத்தை ஆய்வு செய்யாமல் எந்தவித கருத்தையும் கூற முடியாது என்று கூறியுள்ளார்.

- கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட -

# $3^1/_2$ அங்குல துப்பாக்கியுடன் பாதாள உலகத்தவர் கைது!

(கொழும்பு)

பெல்ஜியம் நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்றரை அங்குல நீளமுள்ள தானியங்கி கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தி ரூபா 65 ஆயிரம் ஒப்பந்தத்துடன் கனேமுல்ல பகுதியில் நடத்தப்பட்ட கொலைச் சம்பவம் முதல் பல கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த துப்பாக்கியுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த வருடம் பௌத்தர்களின் பொசன் போயா தினத்தன்று கனேமுல்ல என்ற இடத்தில் வியாபாரி ஒருவர் ரூ 65 ஆயிரம் ஒப்பந்தம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இக் கொலையைப் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த மூவர் நடத்தியுள்ளனர். கம்பகா மாவட்டப் பொலிசார் மேற்படி குழுவினரைக் கைது செய்துள்ளனர்.

மேற்படி துப்பாக்கி சட்டைப் பையில மறைத்து வைத்துக் கொண்டு செல்லக் கூடிய சிறிய அமைப்பாகும்.

## புகைப்பிடிப்போர் அதிகரிப்பு!

யாழ். குடாநாட்டில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது.

அண்மைக் காலமாகவே இதன் அதிகரித்த போக்கு காணப்படுவதாக சுகாதார தொண்டர் அமைப்பு நடத்திய மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது.

# சிறிலங்கா கிரிக்கெட் வீரர்களின் சம்பளம் முப்பது வீதத்தால் குறைப்பு!

சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை கிரிக்கெட் வீரர்களின் சம்பளத்தை முப்பது சதவீதத்தால் குறைத்ததுடன் தேசிய அணியில் அங்கம் வகிக்கும் வீரர்களுக்கு சில ஊக்குவிப்புக்களை அறிமுகம் செய்துள்ளது.

மத்திய ஒப்பந்தங்கள் தொடர்பான கிரிக்கெட் வீரர்களின் தொகையையும் சபை 15இல் இருந்து 12 ஆகக் குறைத்துள்ளது.

2002 ஆம் ஆண்டில் சபைக்கு 27 லட்சம் டொலர் நஷ்டம் ஏற்பட்டது. சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதற்காக புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்த அடிப்படையிலான 12 வீரர்களுக்கு கடந்த வருட அடிப்படைச் சம்பளத்தில் 70 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வெற்றியடையும் ஒவ்வொரு போட்டி தொடர்பாகவும் மேலதிகமாக ஐந்நூறு டொலர் பணமும் போட்டிக் கட்டண போனசும் இவர்களுக்கு வழங்கப்படும் எனவும் சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

# கிராண்ட்ப்றீ 2ம் கட்ட போட்டிகள் இன்று ஆரம்பம்

இரண்டாவது ஆசிய கிராண்ட்ப்றீ மெய்வன்மைப் போட்டிகள் இரண் டாம் கட்ட நிகழ்வுகள் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளன.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் மாலை 5 மணிமுதல் இரவு 8 மணிவரை இப் போட்டிகள் நடைபெற இருக்கின்றன.


மெய்வன்மை கிராண்ட்ப் றீ போட்டிகள் சிறிலங்காவில் நடைபெறவுள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

4 கட்டங்களாக நடைபெறும் இப் போட்டிகளில் சிறிலங்கா சார்பில் 6 மெய்வல்லுனர்கள் பங்குபற்றவுள்ளனர். இத்தொடரின் முதலாம் கட்டப் போட்டிகள் கடந்த புதனன்று இந்தியாவின் ஹைதராபாத்தில் நடைபெற்றது இப்போட்டியில் சிறிலங்கா 2 தங்கப்பதக்கங்களையும் 4 வெள்ளிப்பதக்கங்களையும் சுவீகரித்தது. மூன்றாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 5ம் திகதி பாங்கொக்கிலும் நான்காம் கட்டப் போட்டிகள் ஜூன் 9 ஆம் திகதி மணிலாவிலும் நடைபெறவுள்ளன.

முடிவில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கூடுதலான புள்ளிகளைப் பெறுவோருக்கு தலா 3000 டொலர்களும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 1250 டொலர்களும் மூன்றாம் இடம்பெறுபவருக்கு500 டொலர்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மெக்ஸிச்கோவின் சான்ரொசில் நடைபெறும் கோபா லிபடேடர்ஸ் செம்பியன் கால் இறுதிப் பந்தயத்தில் மோதும் மெக்ஸிக்கோவின் றிக்காடோ ஒசோரியாவும் பிரேசிலின் வில்லியம்சும்



-வல்வெட்டித்துறையில்-

# பாடசாலை விளையாட்டு மைதானமருகே புதிய படைத்தளம் அமைக்க முயற்சி

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை, சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அண்டியுள்ள பகுதியில் மீண்டும் புதிதாகப் படைத்தளம் அமைக்கும் பணியினை சிறிலங்கா படைத்தரப்பு நேற்று ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே இப்பகுதியில் படையினர் முகாம் அமைக்க முற்பட்ட போது மக்களின் எதிர்ப்பினை அடுத்து இந்த முகாம் அமைக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் நேற்று முதல் இப்பகுதியில் படையினரும், படை முகாம் அமைப்பதற்கான பொருட்களும் கொண்டுவந்து குவிக்கப்பட்டு முகாம் அமைக்கும் பணி தீவிரகதியில் இடம் பெற்றுவருகின்றது.

படையினரின் இச் செயலினால் அப்பகுதி மக்கள் அச்சமும் கவலையும் கொண்டுள்ளனர். (27)

## செட்டிகுளத்தில் 15 பவுன் நகை திருட்டு

(அலுவலக செய்தியாளர்)

செட்டிகுளம் பாவற்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் பதினைந்து பவுன் நகைகள் களவாடப்பட்டுள்ளன.

பாவற்குளத்தில் உள்ள நாகராசா என்பவரது வீட்டிலேயே மேற்படி நகைகள் களவாடப்பட்டதாகவும் இரவு வேளையில் மயக்க மருந்து தூவப்பட்டு நகையுடன் கூடிய பெட்டியை எடுத்துச் சென்று நகைகளை எடுத்து விட்டு பெட்டியை வேலியோரத்தில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். (பா)

## உலக சூழல் தின நிகழ்வுகள் முல்லை. மாவட்டத்திலும் ஏற்பாடு

2003 உலக சூழல் தினத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்பாக நடாத்துவதற்கான திட்டமிடல் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் காலை 9.45 மணிக்கு மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட துறைசார் பிரிவுப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டார்கள். உலக சூழல் தினத்தை முன்னிட்டு மரநடுகை, கொடி வாரம், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சிரமதானங்கள் பெரிய அளவில் நடத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரண்டாவது நாளாக நேற்று தமிழீழப் பெண்களின் சங்கமம்

(மன்னார்)

மன்னாரில் தமிழீழப் பெண்களின் சங்கமம் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதில் சிறப்புரைகளை மன்னார் மாவட்ட பெண்கள் நிறுவனப் பொறுப்பாளர் பூவிழி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர், திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

இன்று மூன்றாவது நாளாக சங்கமம் நிகழ்வு சிறப்புற இடம் பெறவுள்ளது.

இதில் மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், மட்டு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

அத்துடன் அரங்க செயற்பாட்டுக் குழு நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (மி)

மன்னாரில் காணாமல் போன சிறுவர்கள்

## வவு. குருமன் காட்டில் புலிகளால் கண்டுபிடிப்பு

மன்னாரில் காணாமல் போன நான்கு பாடசாலை மாணவர்களை விடுதலைப்புலிகள் தேடிக் கண்டு பிடித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் எழுத்தூர் பகுதியில் பாடசாலைக்குச் சென்ற மேரிநாதன் யாசன் (வயது-15) இவரது சகோதரரான மேரிநாதன்- எடிசன் (வயது 13) மகாதேவன் ராசகுமார் (வயது-15) செபதேயு- தீபன் (வயது -13) ஆகிய சிறுவர்கள் மீண்டும் வீடுதிரும்பவில்லை.

அதனையடுத்து சிறுவர்களைத் தேடிய பெற்றோர் சிறுவர்கள் பற்றி அறிய முடியாமல் இருந்தமையால் மன்னார் மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் முறைப்பாடு செய்தனர் இதனை யடுத்து விடுதலைப் புலிகள் சிறுவர்களைத் தேடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார்கள் இதன் விளைவாக கடந்த வியாழக் கிழமை மேற்படி நான்கு சிறுவர்களும் வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளினால் கண்டு பிடிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (10)

# கிளி. மாவட்டத்தில் 22மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசில் பெற்றனர்

(அலுவலக செய்தியாளர்)

2002-2003-ஆம் ஆண்டிற்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வுகிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை 10.00மணிக்கு கிளி/அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளி.மாவட்டமேலதிக அரசாங்க அதிபர், கல்விக்கழகத்தைச் சேர்ந்த ஞானம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் கண்டாவளை பூநகரி உதவி அரசாங்க அதிபர்கள், தேவசகாயம் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சிறப்புரையினை வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரத்தினமும் ஆசியுரையினை தேவசகாயம் அடிகளாரும் நிகழ்த்தினர்

கிளிநொச்சி அரச அதிபர் தனது தலைமையுரையில் பளை மத்திய கல்லூரியில் இதுவரை கல்வி பயின்ற மாணவர்கள் 22பேர் பல்கலைக்கழக மருத்துவ பீடத் துக்கு தெரிவாகியுள்ளனர் என்றும் ஆனால் பளை மருத்துவமனைக்கு ஒரு வைத்தியர் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களில் 22பேர் மட்டும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மகாபொல காசோலைகளைபெற்றுக் கொண்டனர். ஏனையோர் அரச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



## அமெ.அபிவிருத்தி உயர் அதிகாரி சிறிலங்காவிற்கு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான உயர் அதிகாரி ஒருவர் அடுத்த வாரம் சிறிலங்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமெரிக்க முகவரின் பிரதித் தலைவரான இவர். வரும் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை சிறிலங்காவில் தங்கி நிற்கவுள்ளார்.

இவர் கொழும்பில் தங்கிநிற்கும் நாட்களில் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு இவர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிலும் கலந்து கொள்வார்.

### வவுனியா...

பட்டவர்களுக்கு தெரியப்படுத்தி சடலத்தை மீட்டுள்ளனர்.

இராணுவ முகாமில் இருந்து இக்குளம் இருநூறு மீற்றர் தொலைவில் உள்ளது. இது கொலையாக இருக்கலாம் என சந்தேகிக்கப் படுகின்றது.

இச்சடலம் வவுனியா வைத்திய சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. (28)

### வர்த்தகர்...

வில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

கரந்தன் பகுதியை அண்டி உள்ள விவசாயக் கிணற்றில் இருந்து இவரது சடலமும் இவரது மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

இவர் வெட்டிக்கொலை செய்யப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (27)

### விடுதலைப் புலிகளின்..

ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து பிரதமர் முக்கிய அமைச்சர்களுடன் இன்று ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து அரசாங்கம் நோர்வேயுடன் கலந்துரையாடவிருக்கின்றது.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக மாற்றுத்திட்டம் ஒன்றை உள்ளடக்கி தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு கடிதம் ஒன்று சில தினங்களில் அனுப்பி வைக்கப் படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கண்காணிப்புக்குழு...

வலகம் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் சுற்றிவளைக்கப்பட்டமைக்கு விடுதலைப்புலிகள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி நேற்று மாலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் ஒலே கொண்டமைச் சந்தித்து . ஆட்சேபனையையும் அதிருப்தியையும் தெரிவித்துள்ளார்.

### மூன்று சிறில...

பேச்சாளர் பிரிகேடியர் சனத்கருணாரட்ண தெரிவிக்கையில் கடற்கொந்தளிப்புக்காரணமாக இவர்கள் காணாமல் போயிருக்கலாம் என்றும் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் கூறினார்.

### பொங்குதமிழ்...

ருந்தார். நினைவுத்தூபி அமைக்கும் பணி முடிவுற்றதும் தூபி திறப்பு விழா வெகுவிரைவில் இடம்பெறலாம் என தூபி அமைப்பு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (28)

### கொக்காவில்...

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொருவரான தங்கராசா என்பவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவத்தில் காயமடைந்த கமலினி என்பவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதே வேளை சிற்றம்பலம் பத்மநாதன் என்பவரின் சடலம் அக்கராயன் பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதோடு இவர்கள் பயணம் செய்த கைஎஸ் வாகனம், மற்றும் பொருட்கள் யாவும் கிளிநொச்சி காவல்பணிமனையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பணிமனையில் உள்ளது.

இதேவேளை இவர்களின் பயணப் பொதிக்குள் திருமண அழைப்பிதழ்கள் காணப்படுவதைத் தொடர்ந்து இவர்கள் திருமணத்திற்கோ அல்லது திருமண வீட்டிற்கோ சென்றிருக்கக்கூடும் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## 19 பேருக்கு வழங்கப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தினால் மே மாதத்தில் 19 பேருக்கு கால்களை வழங்கியுள்ளது.

கடந்த மாதத்தில் 19 கால்களையும் ஆறு பாதணிகளையும் 23 புதிய பாதம் மாற்றம், இரண்டு பூட்டு மாற்றம் என்பவற்றையும் 25 பட்டிகள், 25 லைனிங்,பாதம் ஒன்று, பூட்டு ஒன்று, நிறம் பூசுதல் இரண்டு ஆகியன திருத்தம் செய்துள்ளதாகவும் மேற்படி நிறுவனத்தின் மாதாந்த செயற்பாட்டு அறிக்கை தெரிவிக்கின்றது. (பா)


இயற்கை எம் உடமை அதைக் காப்பது நம் கடமை



## தேவை

ஈழநாதம் நிறுவனத்தில் கடமைபுரிய கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மொழி பெயர்ப்பாளர் (ஆங்கிலம் – தமிழ்)

02. கணனி
- கணனியில்அடிப்படைக்கல்வி முடித்தவர்கள்.
- Page Maker தெரிந்தவர்கள்.
- தமிழ் தட்டெழுத்தாளர்கள்.

03. ஒப்புநோக்குனர்
- க.பொ.த. உ/த சித்தியடைந்தவர்கள்.
- ஓய்வு பெற்ற தமிழ்ப் பாட ஆசிரியர்கள்.

மேற்படி தகைமையுடையவர்கள் எதிர் வரும் 04.06.2003 புதன்கிழமை கிளி. ஜெயந்திநகரில் அமைந்துள்ள ஈழநாதம் பணி மனையில் மு.ப. 10.00 - 12.00 மணிவரை நடை பெறும் நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளவும்.

கிளி. நகரில் வசிப்பவர்களுக்குமுன்னுரிமை அளிக்கப்படும்.

ஈழநாதம்


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.